28th November 1970]

திரு. ஆர். ராமன் நாயர் : பத்து ஏக்கர் என் பெயரில் இல்லை என்று தெரியப்படுத்துகிறேன். என் கைக்கு அது வரவில்லை. விவசாயம் செய்யவும் இல்லை. அது திரும்பக் கிடைக்கும் என்ற எண்ணமும் எனக்கில்லை. அதைவிட்டு விட்டேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பட்டா உங்கள் பெயரில் தானே இருக்கிறது. அதை ஒப்புக்கொண்டால் போதும்.

திரு. எஸ். ராகவானந்தம் : பதவியில் இருக்கும்போது நிலம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். பதவி போனபிறகு என் போன்ற நிலம் இல்லாத, வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை, நிலம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாளைக்கே ராஜினாமா செய்தால் தரப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ராகவானந்தம் அவர்கள் ராஜினாமா செய்யப் போகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

Service Stamps

*16. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU SAW. GANESAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that, in District and Taluk Offices, when cyclostyled copies of different notifications are sent by 'Book Post' to the addressees, 20 paise Service Stamps are affixed instead of 15 paise stamps ;

(*b*) whether the audit department had passed any remarks in this regard ; and

(*c*) whether the Government will take action to prevent this wastage of public money ?

அஞ்சல் தலை

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. சா. கணேசன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாவட்ட, வட்ட அரசலுவலகத்திலிருந்து அனுப்படும் பல அறிவிப்புகள் ஒரே மாதிரியாகப் படி எடுக்கப்பட்டு பிறருக்குத் திறவையாக அனுப்பப்பெறும்பொழுது 15 காசு அஞ்சல் தலை ஒட்டுவதற்குப் பதிலாக 20 காசு அஞ்சல் தலை ஒட்டப் பெறுவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இது பற்றித் தணிக்கைத் துறை ஏதாவது கருத்துத் தெரிவித்ததா ?

(உ) இவ்விரயத்தைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

[28th November 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 15-ந் தேதி மே, 1970 முதல் திறவையாக அனுப்பப்பெறும் தபால்களுக்கு கட்டணம் 15 காசிலிருந்து 20 காசாக தபால் இலாக்காவால் உயர்த்தப்பட்டிருப்பதால் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து திறவையாக அனுப்பப் பெறும் தபால்களுக்கு 20 காசு அஞ்சல் தலை ஒட்டப்படுகிறது.

(இ) இல்லை. (உ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் கேட்ட கேள்வி இந்த மாறுதலுக்கு முன்பாக இம்மாதிரி அதிகமான காசு பெறுமானமுள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறதா என்பதுதான். எனவே அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்துத்தான் பதில் அளித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கேள்வியைப் பொறுத்த வரையில், அப்படிக் கேட்கப்பட்டதாக இல்லை. ஆனால் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டதில், அவர்கள் 18-5-1970 -க்குப் பின்னால்தான் இவ்வாறு ஒட்டப் பெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு முன்னால் இவ்வாறு ஒட்டப்பட்டதாகக் கூறினால், அதுபற்றி விசாரிக்கலாம்.

Bench of the Tamil Nadu High Court at Madurai

*17. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries pleased to state :

(*a*) whether any representations have been received by the Government for the setting up of a Bench of the Tamil Nadu High Court at Madurai ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக அரசால் முறையீடுகள் ஏதேனும் பெறப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம் .

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU G. VASANTHA PAI : In the event of a Bench of the Tamil Nadu High Court being set up at Madurai, may I ask the Hon. Minister whether, in view of the persistent efforts of the hon. Member Thiru D. Santosham, a statue will be erected for him ? (Laughter)